The Details in Detail

# Fundamental Code of Ethics of KLEEN PARK (PVT) LTD

## கிளீன் பார்க் (பிறைவேட்) லிமிடட்யின் அடிப்படை ஒழுக்க நெறிக் கோவை

கிளீன் பார்க் (பிறைவேட்) லிமிடெட் இல் (KLEEN PARK (PVT) LTD) வேலை செய்வோர் சகலரும் வொஷ் என்ட் குவிக் வேலை செய்வோர் (Wash & Quick Detailers) ரின்ட் என்ட் விரப் எப்லிகேட்டர்ஸ் (Tint & Wrap Applicators) கிறீஸ் மற்றும் பராமரிப்பு தொழிநுட்பவியலாளர்கள (Lube & Maintenance Technicians), அலுவலக உதவியாளர்கள் பாதுகாப்பு அலுவலர்கள் ஆகிய சகலரும் சத்திய பிரமாணம்/உறுதியுரை அளித்து கையொப்பமிட வேண்டும்.

A. <u>தொழிலின் பொறுப்புக்கூறல்</u>

A1. நான் எனது தொழிலை செய்யும் போது எனது கம்பெனியுடனும் எனது சக ஊழியர்களோடும் எனது மேலதிகாரிகளோடும் வாடிக்கையாளர்கள் மற்றும் விநியோகத்தர்களோடும் மிக நேர்மையோடு நடந்து கொள்வேன் என உத்தரவாதமளிக்கிறேன்.

A2. தோழில் ரீதியான பொருள், உபகரணங்கள், சாதனங்கள், தொழிநுட்பம் மற்றும் முறைமை மூலமாக உயரிய தராதரத்தை பேணும் முகமாக நான் எனது மேலான சேவையை வழங்குவதற்கு நான் உண்மையாக உழைத்திடுவேன்.

A3. தொடர்ச்சியான பயிற்சியும் சேர்ந்த கல்வியும் மூலமாக எனது சேவையின் தராதரத்தை உயர்த்துவதற்காக நான் தொடர்ந்து பாடுபடுவேன்.

**B. <u>வாடிக்கையாளர் தொடர்பில் பொறுப்புக்கூறல்</u>**

B1. வாடிக்கையாளரினால் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளபடி சரியான முறையில் ரீ-கண்டிசன் செய்ததும் வாடிக்கையாளருக்குத் தேவையானதுமான பொருளையும் சேவையும் மட்டுமே நான் வாடிக்கையாளருக்கு பணிந்துரை செய்வேன்.

B2. வாடிக்கையாளரினால் தெளிவாகக் குறிப்பிடப்படும் அத்துடன் வாடிக்கையாளருக்கு தேவைப்படும் பொருட்களும் சேவைகளும் மட்டுமே நான் வாடிக்கையாளருக்கு பணிந்துரை செய்வேன்

B3. சேவை வழங்குவதற்கான ஆரம்பம் தொடக்கம் அச் சேவை வழங்குதல் முடியும் வரை சகல வாடிக்கையாளரையும் நான் விநயமாகவும் மிக அவதானத்துடனும் கவனிப்பேன்.

B4. எங்களுடைய பொறுப்பில் இருக்கும் வரை வாடிக்கையாளரின் வாகனங்கள் / சொத்துக்களை பாதுகாப்பதற்கு நான் சகல விதமான கவனமும் எடுப்பேன்.

B5. வாடிக்கையாளருக்கு தேவைப்படும் சேவையை அவர்களுடைய எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறு அல்லது அவர்கள் எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு மேலாக மிகச் சிறப்பான முறையில் செய்து கொடுக்க என்னாலான சகல முயற்சியையும் மேற்கொள்வேன்.

C. <u>ஊழியர்களின் மதிப்பும் மரியாதையும்</u>

C1. நான் ஒவ்வொரு தனிப்பட்டவரினதும் தனித்துவம், பிரத்தியோக தன்மை தனிப்பட்ட குணநலம் உட்பட தனி மனித உரிமையை பாதுகாக்கும் வகையில் மரியாதை கொடுத்து அவர்களுக்கு கீழ்ப்படிந்து நடப்பேன்.

C2. தனிப்பட்ட முறையிலோ அல்லது பொதுவாகவோ ஒருவரின் இனம், சமயம் மொழி, சாதி, நிறம் அல்லது அங்கக் குறைபாடு காரணமாக பாகுபாட்டை காட்டவோ அவர்களுக்கு தொந்தரவு செய்வதையோ தவிர்த்தக் கொள்வேன்.

C3. வேலை தலத்தில் வேலை செய்யும் போது ஏதேனும் சமய சார்பான சிலை அல்லது அவ்வாறான அடையாளங்கள அத்துடன் பொதுவான இடத்தில் சமய சடங்குகளை மேற்கொள்வதையோ நான் முழுமையாக தவிர்த்துக் கொள்வேன்.

C4. ஏதேனும் அரசியல் கட்சியின் அடையாளங்கள் குறிகள், பிரதிவிம்பங்கள் ஆகியவற்றை காட்சிப்படுத்தவோ ஏதேனும் வகையிலான உரையாடலை நடத்துவதையோ அக் கட்சி சார்பான விவாதங்களுக்கு உட்படுவதையோ நான் முழுமையாக தவிர்த்துக் கொள்வேன்.

C5. என்னுடன் கடமையாற்றும் எனது சக ஊழியர்களோடும் மேலதிகாரிகளுடனும் அங்கத்தினருடனும் அல்லது வாடிக்கையாளருடனும் அவர்களை இழிவு படுத்தும் வகையில் பேசவோ கதைக்கவோ உரையாடவோ மாட்டேன்.

C6. எதேனும் வகையிலான நன்கொடை, உதவி, தரகுப் பணம் பிரத்தியோக கடன் போன்றவற்றை எந்தவொரு நபரிடமிருந்தோ வியாபார நிறுவனங்களிடமிருந்தோ அல்லது வாடிக்கையாளரிடமிருந்தோ எதிர்ப்பார்ப்பதையோ பெற்றுக் கொள்வதையோ நான் தவிர்த்துக் கொள்வேன்.

C7. எந்தவொரு நேரத்திலும் எனது வேலை தலத்தில் இழிவான அல்லது ஆபாசமான சொற்களை பயன்படுத்துவதை நான் தவிர்த்துக் கொள்வேன்.

C8. எந்தவொரு நேரத்திலும் எவ்வாறான சூழ் நிலையிலும் நான் எனது சக ஊழியர்களையும் எனது மேலதிகாரிகளையும் மதித்து நடக்கத்தவற மாட்டேன்.

D. <u>சுற்றாடல் தொடர்பான பொறுப்புக்கூறல்</u>

D1. நான் கூடியவரை கழிவுப் பொருட்களை குறைப்பதற்கும் அத்துடன் குறைந்தளவு இயற்கை வளங்களை பயன்படுத்துவதற்கும் உண்மையாக உழைப்பேன்.

D2. நான் எப்பொழுதும் ஆபத்தானதும் அபாயகரமானதுமான இரசாயன பொருட்களை பயன்படுத்துவதை குறைத்துக் கொள்வேன்.

D3. கழிவு தண்ணீர் மற்றும் மாசுபடுத்தப்பட்ட தண்ணீரை வெளியேற்றும் போது சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் பிரமாணங்களை நான் மதித்து நடப்பேன்.

E. <u>இரகசியத்தன்மை பேணுதல்</u>

E1. கம்பெனியின் சகல தகவல்களையும், தரவுகளையும் நான் சரியாகவும் பிழையின்றியும் பதிவு செய்து அறிக்கையிடுவேன்.

E2. நான் எந்தவொரு தகவல்களையும் நியாயமற்ற முறையில் பெற்றுக் கொள்ளவோ பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களை தவறான நோக்கத்திற்கு பயன்படுத்தவோ அவ்வாறு பெறப்பட்ட தகவல்களை அனுமதியின்றி ஏதேனும் தனி நபருக்கோ அல்லது நிறுவனத்திற்கோ வெளிப்படுத்துவதையோ செய்யமாட்டேன்.

E3. நான் வேலை செய்யும் காலத்திலும் அதன் பின்னர் எல்லா நேரத்திலும் கிளீன் பார்க் (பிறைவேற்) லிமிடட் நிறுவனத்தின் ஏதேனும் ஊழியர்கள் அல்லது வாடிக்கையாளர்களிடம் வேறொரு நிறுவனத்தில் சேர்வதற்கோ அல்லது வேறொரு நிறுவனத்தின் சேவையை பெற்றுக் கொள்ளும் படி கோரவோ அல்லது அதற்கு ஊக்கமளித்தலோ செய்யமாட்டேன்.

E4. நான் வேலை செய்யும் காலத்திலும் அதன் பின்னர் எல்லா நேரத்திலும் கிளீன் பார்க் நிறுவனத்தில் வேலைசெய்யும் எனது சக ஊழியர்களுக்கும் அவ்விடயம் தொடர்பான மேலதிகாரிக்கும் தவிர்ந்த வேறு எவருக்கும் எவ்விதமான இரகசியங்களும் அல்லது தகவல்களும் அல்லது வியாபார இரகசியங்களும் வெளிப்படுத்த மாட்டேன்.

E5. எவராவது ஒருவருக்கு இரகசியம் அல்லது எவ்வாறான தகவல்கள் வெளிப்படுத்த வேண்டுமென கேள்வி எழும்போது அத்துறைக்கு பொறுப்பான முகாமையாளருடன் நான் கலந்தாலோசிப்பேன்.

F. <u>கம்பெனி சொத்துக்களை பாதுகாத்தலும் அவைகளை சரியான முறையில் பயன்படுத்தலும்</u>

F1. கம்பெனிக்குச் சொந்தமான உருவமுள்ள அல்லது தொட்டுணர முடியாத சொத்துக்கள் யாவற்றையும் சரியானதும் திறமையானதுமான முறையில்

பயன்படுத்தவும் அவைகளை கம்பெனியின் பயன்பாட்டிற்கு மாத்திரமே பயன்படுத்தவும் நான் உத்தரவாதமளிக்கிறேன்.

F2. வேலை செய்யும் காலத்திலும் வேலையிலிருந்து நீக்கப்பட்டு அல்லது ஓய்வு பெற்ற பின்னரும் கம்பெனியின் உரித்து தொடர்பான தகவல்களும் கம்பெனியின் புலமைச் சொத்து விபரங்களும் நான் நன்கு பேணி பாதுகாப்பேன். அனுமதியின்றி அவ்வாறான தகவல்களை பகிர்ந்து கொள்வதானது கம்பெனியின் கொள்கைக்கு முரணான செயலென நான் அறிந்து வைத்துள்ளேன்.

## G. முன்னைய வேலை கொள்வோர் தொடர்பான கடப்பாடு

G1. நான் இக் கம்பெனியின் வேலை செய்யும் காலப்பகுதியில் கிளீன் பார்க் (பிறைவேற்) லிமிடெட் கம்பெனியில் சேர்ந்து கொள்ளும்படி முன்னைய கம்பெனியின் வேலையாட்களை அல்லது வாடிக்கையாளர்களை கோரவோ அதற்கு ஊக்கமளிக்கவோ மாட்டேன்.

G2. எனது முன்னைய வேலை கொள்வோரிடமிருந்து பெற்றுக் கொண்ட இரகசியமாக பேணப்படவேண்டிய வியாபார இரகசியங்கள் அல்லது தகவல்களை நான் கிளீன் பார்க் கம்பெனியில் வேலை செய்யும் காலப்பகுதியில் பயன்படுத்தவோ அவைகளை வெளிப்படுத்தவோ மாட்டேன் என உறுதியளிக்கின்றேன்.

எனது சுய விருப்பத்துடனும் பய பக்தியுடனும் நான் இத்தால் உறுதியுரையளிக்கின்றேன்.

ஊழியரின் பெயர்: ..............................

சேமலாப நிதி (E.P.F.) இல. ..................................

கையொப்பம் ..................................

திகதி ....................................